# *புனித ராபர்ட் பெல்லார்மின் (1542 – 1621)*

இவருடைய பெற்றோர்க்கு பத்து மக்கள். இவர் மூன்றாவது குழந்தை. இவருடைய தாயார் ஒரு பாப்புவின் கிட்டிய உறவினள். அவள் ஏராளமான தர்மங்கள் கொடுப்பாள். அடிக்கடி செபிப்பாள், தியானிப்பாள், உபவாசம் இருப்பாள். அப்பொழுது தான் தொடங்கப்பட்டிருந்த இயேசு சபையை இவள் மிக நேசித்தாள். தம் மக்கள் அனைவரும் அந்த சபையில் சேர வேண்டும் என்று ஆசித்தாள்.

ஒரு நாள் சிறுவன் ராபர்ட் தன் அன்னையின் அருகில் முழந்தாளிட்டிருந்தார். சுவரில் ஒரு புனிதரின் படத்தைப் பார்த்தார். புனிதர் கர்தினாலின் உடைகளைத் தரித்திருந்தார். உடனே ராபர்ட் தன் அன்னையை நோக்கி, “அம்மா இதோ பாருங்கள். நான் கர்தினால் ஆகி விட்டேன்” என்றார். தாய் அவரை அமைதியாக இருக்கச் சொன்னாள். உடனே அவர் இன்னொரு படத்தை சுட்டிக் காட்டினார். அதில் நான்கு திருமறை வல்லுநர்களை சித்தரித்திருந்தது. அதைச் சுட்டிக்காட்டி “அம்மா, அதோ நான்கு திருமறை வல்லுநர்களைப் பார்க்கிறீர்கள். ஒரு நாள் நானும் அவர்களில் ஒருவன் ஆவேன்” என்றார். இந்த இரண்டாவது இறைவாக்கு பல ஆண்டுகளுக்குப் பின் நிறைவேறியது.

அந்நாட்டிகளில் பரவியிருந்த தப்பறையான கொள்கைகளை எதிர்த்து இவர் நூல்கள் பல எழுதினார். இவர் எழுதிய மறைக்கல்வி நூல் அநேக மொழிகளில் வெளி வந்தது. பாப்புமார் இவரது ஆலோசனையைத் தேடினார்கள். புனித கொன்சாகா ஞானப்பிரகாசியாரது ஆன்ம குரு இவர். துறவிகளுக்கு இவர் மேல்வரிச் சட்டம், தூய்மை, தாழ்ச்சி, கீழ்ப்படிதல் உள்ளவர். ஆயரான இவர், தம் மந்தையை எல்லையற்ற அன்புடன் பராமரித்தார்.

**சிந்தனை:**

அன்பைக் கொண்டிருப்பவன் ஒரு போதும் சேதம் ஆகமாட்டான். அன்பின்றி இருப்பவன் ஈடேற்றம், அடையமாட்டான். (புனித ராபர்ட் பெல்லார்மின்)

**செபம்:**

ஆண்டவரே, திருச்சபைக்கு சிறந்த போதகர்களைத் தாரும்.